இருக்கிற நல வாரியங்களைச் செயல்பட வைப்பதற்கு அரசு என்ன நடவடிக்கை எடுக்கும்?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஹேமச்சந்திரன், இது மூலக் கேள்வியோடு கொஞ்சம்கூடத் தொடர்பே இல்லாதது.

வினா எண் 109, திரு. இரா. இராம் பிரபு, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

109—

விலை நிர்ணயம்

***18610—திரு இரா. இராம் பிரபு:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நெல்லுக்கும், கொப்பரைத் தேங்காய்க்கும் விலை நிர்ணயம் செய்திருப்பதுபோல, மிளகாய் மற்றும் பஞ்சுக்கு விலை நிர்ணயம் செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மிளகாய் மற்றும் பஞ்சுக்கு விலை நிர்ணயம் செய்வதற்கான செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை.

முற்பகல் 10-25

திரு. இரா. இராம் பிரபு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெல்லுக்கும், கொப்பரைத் தேங்காய்க்கும் அரசு விலை நிர்ணயம் செய்திருப்பதுபோல, மிளகாய் மற்றும் பஞ்சுக்கு விலை நிர்ணயம் செய்யப்படுமா என்பது என்னுடைய கேள்வி. என்னுடைய பகுதியிலே, இராமநாதபுரம் மாவட்டத்தில், குறிப்பாக, பரமக்குடி சட்டமன்றத் தொகுதியில் அதிக அளவிலே மிளகாய், பஞ்சு விளைச்சல் இருக்கின்றது. இப்போதுள்ள நிலையில், மழை இல்லாத காரணத்தினால், அங்குள்ள விவசாயிகள் மிகவும் வறண்டு காணப்படுகிறார்கள். மிகவும் குறைந்த அளவிலே அவர்கள் விளைச்சலை ஏற்படுத்தியிருக்கக்கூடிய அந்த மிளகாய்க்கும், பஞ்சுக்கும்

சட்டமன்றப் பேரவை TAMILNADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

2003 மார்ச் 27]

நிரந்தரமாக தமிழக அரசு விலை நிர்ணயம் செய்து கொடுக்குமா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேளாண் விளைபொருள்களுக்கு மத்திய அரசால் விலை நிர்ணயம் செய்யப்படுகிறது. மத்திய அரசினுடைய கட்டுப்பாட்டில் உள்ள Agricultural Cost and Prices Commission தான் இந்தப் பணியை மேற்கொண்டு செயல்படுத்தி வருகின்றது என்பதைத் தங்களின் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஆ. ராஜகோபால்.

திரு.ஆ. ராஜகோபால்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தோட்டப் பயிர் சாகுபடியைப் பொறுத்தளவிலே, மிளகாய், பருத்தி போன்றவை முக்கியமான பணப் பயிர்களாக விளங்குகின்றன. ஆண்டுகள் செல்லச் செல்ல, விவசாயிகளுடைய இடுபொருள் மற்றும் தொழிலாளர்களுடைய கூலி உயர்வு ஆகியவற்றைக் கணக்கிடுகின்றபோது, மிளகாய், பருத்தி போன்ற விளைபொருள்களுக்கு அவர்களுக்குக் கட்டுப்படியாகின்ற விலை கிடைக்காததால், விவசாயப் பெருமக்கள் மிளகாய், பருத்தி போன்ற பணப் பயிர்களைச் சாகுபடி செய்வதைத் தவிர்த்து வருகின்ற ஒரு சூழ்நிலை, தென் மாவட்டங்களில், குறிப்பாக விருதுநகர் போன்ற மாவட்டத்தில் இருக்கின்றது. மாண்புமிகு அமைச்சர், இந்தப் பணப் பயிர்களுக்கு விலை நிர்ணயிக்கின்ற பொறுப்பு மத்திய அரசிடம் இருப்பதாகச் சுட்டிக்காட்டியிருக்கின்றார்கள். ஆனால், அதே சமயத்தில், மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் தாக்கல் செய்துள்ள நிதிநிலை அறிக்கையில், பத்தி 64-ல் துணித் தொழில் குறித்து, துணித் தொழிலுக்காகத் தனி இயக்கம் ஒன்றினைப் பின்பற்றுவோம் எனக் கூறி, அதனுடைய அம்சங்களில் ஒன்றாக, தரமான பருத்தி உற்பத்தியைப் பெருக்குவதற்கும், துணித் தொழிலை அதன் இடுபொருட்களுக்கான தொழிற் பிரிவுகளுடன் ஒருங்கிணைப்பதற்கும் தனிக் கவனம் செலுத்துதல் என்கின்ற ஓர் அம்சத்தினைக் குறிப்பிட்டுள்ளார்கள். தென் மாவட்டங்களில் நூற்பாலை என்பது முக்கியமான வேலைவாய்ப்பினை அளிக்கின்ற ஒரு துறையாக இருக்கின்றது. இந்த நூற்பாலைத் தொழிலுக்குப் பஞ்சு மிகவும் அவசியமாக இருக்கின்றது. கடந்த காலங்களில் பருத்திக்குக் கட்டுப்படியான விலை கிடைக்காததால் இங்கே பருத்தி சாகுபடி செய்கின்ற பரப்பளவு குறைந்து, அதனால் வட மாநிலங்களிலிருந்து பஞ்சு வாங்குகின்ற ஒரு நிலைமை ஏற்பட்டது. இத்தகைய

சூழ்நிலையைத் தவிர்ப்பதற்கு, பருத்தி சாகுபடி செய்கின்ற பரப்பளவை விஸ்தரிக்கும்பொருட்டு, அத்தகைய சாகுபடியாளர்களுக்குக் கட்டுப்படியாகின்ற விலையை நிர்ணயிப்பதற்கு இந்த அரசு மத்திய அரசிடம் பரிந்துரை செய்யுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசினுடைய விலை நிர்ணயத்தின்படி, குவிண்டாலுக்கு 1,875 ரூபாய் என்று பருத்திக்கு விலை நிர்ணயம் செய்திருக்கிறார்கள். தற்போது ரூ. 2,000 முதல் 2,650 வரை மார்க்கெட்டில் விலை போய்க்கொண்டிருக்கிறது. அது மட்டுமல்ல, மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்கள் அரசு, தமிழ்நாட்டில் பருத்தி உற்பத்தியை அதிகமாக்க வேண்டுமென்ற நோக்கத்தோடு 2002-2003 ஆம் ஆண்டில் Contract Farming System-ல் Appachi Cotton நிறுவனம் மூலமாக, கோவை மாவட்டம் பொள்ளாச்சி மற்றும் தேனி மாவட்டத்தில் போடிநாயக்கனூர் போன்ற பகுதிகளில் ஒப்பந்தப் பண்ணை அடிப்படையில் பருத்தி சாகுபடி செய்வதற்கு ஊக்குவித்து வருகிறது என்பதைத் தங்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. என்.கே. பெருமாள்.

திரு. என்.கே. பெருமாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வானம் பார்த்த விவசாயத்தை நம்பி வாழ்கின்ற என்னுடைய தொகுதியான விளாத்திகுளம் தொகுதியிலே ஆந்திராவிற்கு அடுத்தபடியாக அங்கே குண்டு சம்பா வத்தல் அதிகமாக விளைகின்றது. இரண்டு ஆண்டு காலமாகப் பருவ மழை பொய்த்ததன் காரணமாக, வத்தலுக்கு நம்முடைய மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு விலை நிர்ணயம் செய்யுமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் மூலமாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-30

மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே சொன்னதே இதற்கும் பொருந்தும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 110, திரு. ஆர். சக்ரபாணி, மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்.